JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- - Pw- 4- Witness
for Prosecution

CC.No. 70/2024 Crime No. 403/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | Pw. 4 கிருஷ்ணமூர்த்தி | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 03.06.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது சேலம் மாநகரம், சூரமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பவானி வட்டக்காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது, கடந்த 21.11.2023 ஆம் தேதியன்று மாலை 18.00 மணிக்கு பவானி காவல் நிலைய சிறப்பு உதவியாளர் பார்வதி என்பவர் நிலைய அலுவலில் இருந்த பொழுது பவானி தாலுகா, தொட்டிபாளையம், மஞ்சள் செலம்பகவுண்டன்பாளையத்தை சேர்ந்த மினியப்பகவுண்டர் மகன் அம்மாசைகவுண்டர் என்பவர் இறப்பு தொடர்பாக அம்மாசை கவுண்டரின் மகன் ரமேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரிணைப் பெற்று நிலைய குற்ற எண் 461/ 2023, சட்டப்பிரிவுகள் 174 Cr.P.C கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் . குற்ற எண் 461/ 2023, சட்டப்பிரிவுகள் 174 Cr.P.C கீழ் **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நான் சம்பவ இடம் சென்று பார்வையிட்டேன். பின்னர் 22.11.2023 ஆம் தேதியன்று காலை ஈரோடு அரசு மருத்துவமனை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு விபத்தில் இறந்து போன அம்மாசை கவுண்டர் என்பவரது பிரேதத்தை பஞ்சாயத்துதாரர்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத பரிசோதனை செய்து பிரேத பரிசோதனை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்விபத்து தொடர்பாக ஏற்கனவே பவானி காவல் நிலைய குற்ற எண். 403/2023, சட்டப்பிரிவுகள் 279, 337 IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.03 17:32:18 +0530

செய்யப்பட்டுள்ளது தெரியவந்ததால், இந்த வழக்கு கோப்பை குற்ற எண். 403/2023, சட்டப்பிரிவுகள் 279, 337 IPC வழக்கின் புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்புவித்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால், சரியல்ல. நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் இந்த குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.03 17:32:24 +0530

Sd/– (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani